Registered No. M-4433.

Madras War Review (TAMIL) 16-6-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV

1944-ம் ஜூன் 16, வெள்ளிக்கிழமை

இதழ் 41

மார்ஷல் ஸ்டாலின்.

மகத்தான வெற்றி

நமது நேசர்களுக்கு இது மகத்தானதோர் வெற்றி என்பது பற்றி சந்தேகமே கிடையாது. இது வரை நடைபெற்றிருக்கும் யுத்தச் சரித்திரங்களிலேயே, இவ்வளவு பரந்த முறையில் ஆலோசிக்கப்பட்ட முயற்சி, மிக உயரிய திட்டம், திறம்பட அதை நிறைவேற்றியது, ஆகியவை இடையவே கிடையாது என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

வட பிரான்சில் போய் இறங்கிய நேசப் படைகள் நிகழ்த்திய ஏழு நாட் போரின் பலா பலன்களைச் சுருக்கிச் சொல்லவேண்டுமானால், பெருவாரியான நேசப் படைகள் பிரிட்டிஷ் கால்வாயைக் கடந்து வடபிரான்சில் வெற்றிகரமாக இறங்கினார்கள் என்று தடை யில்லாமல் சொல்லலாம்.

மார்ஷல் ஸ்டாலின், 'ப்ரவ்டா' பத்திரிகையின் பிரதிநிதியிடம் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : மார்ஷல் ஸ்டாலின்	1	ஐரோப்பியக் கோட்டை மேல் பெருந் தாக்குதல் ..	7
மகத்தான வெற்றி	1	சுவர் இடிகிறது !	9
முரசொலி	2	யுத்த காலத்தில் அரசாங்க உதவி	10
தலையங்கம் : இரண்டாம் போர் முனை ..	3	சில ரசமான விவரங்கள்	11
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	வானொலி நாட் குறிப்புக்கள்	11
கல்விமான்களின் கடமை என்ன ?	5	யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"ஜெர்மனி அடியோடு அழிகிற வரையிலும், நேச நாட்டுப் படைகளின் தாக்குதல் போராட்டம் ஒரு போதும் நிற்கப்போவதில்லை. நாஜி ஜெர்மானியரின் ஆதிக்கம் முடிவடையுங் காலம் ஆரம்பமாகிவிட்டதென்று இப்போது சொல்லக் கூடும். ஐரோப்பிய சரித்திரத்திலேயே மகா கொடிய அரசியல் தீமையின் சின்னமாக விளங்கும். 'ரெய்ச்' (ஜெர்மன் அரசாங்க சபை) இன்னும் சில மாதங்களில் நாசமாகி மகா கோரத்துடன் சிதையப் போகிறது.

டாக்டர் பினேஷ், செக்கோஸ்லோவேகியத் தலைவர்
ஜூன் மாதம் 10-ம் தேதி செய்த ஒலிபெருக்கிப் பிரசங்கத்தில் கூறியது.

* * * *

"நான்கு நாட்கள் போராடிய பிறகு, நேச நாட்டுப் படைகள் தமக்கு உறுதியான பாசறை யமைத்துக் கொள்ளுவதற்கு ஏற்ற நல்ல இடங் கிடைத்துவிட்டது. நமக்குக் கிடைத்த வெற்றி பற்றியும், நாம் மேற் கொண்டிருக்கும் வேலையைப் பூரணமாகச் செய்து முடிப்பதற்கு நல்ல முறையில் ஆரம்பமாகி யிருப்பதை முன்னிட்டும் முதலாவதாக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். இரண்டாவதாக மகா சிறந்த முறையில் ஒத்துழைத்து உதவிய நேச நாட்டு விமானப் படைகளுக்கும் கப்பற் படைகளுக்கும் நான் புகழ் மாலை சூட்டவேண்டும்; ஏனென்றால் அவர்களுடைய உதவியில்லாமல், தரைப் படையினராகிய நம்மால், எதுவும் செய்ய முடியாது.

மூன்றாவதாக, சென்ற 4 நாட்களாக நடைபெற்ற போராட்டத்தில் தலை சிறந்த பலன்களைத் தேடித் தந்த நேச நாட்டுப் படைகளைச் சேர்ந்த ஒவ்வொரு உத்தியோகஸ்தரையும் சோல்ஜரையும் என் சொந்த ஹோதாவில் பாராட்ட விரும்புகிறேன். பிரிட்டிஷ் சோல்ஜர்களும், கனடிய சோல்ஜர்களும், அமெரிக்க சோல்ஜர்களும் ஒரே அணியில் ஒத்திருந்து போராடி பெரிய தோர் வெற்றி பெற்றார்கள். இந்த வெற்றியைக் கொண்டு மேலும் நற் பயனடையத் தக்க கேந்திர ஸ்தானத்தில் ஊன்றிக் கொண்டார்கள். ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்கும் சோல்ஜருக்கும்—அவர்கள் எந்தப் பதவியி லிருந்தாலும்—எனது மனமார்ந்த நன்றியும் நல்லாசியும் கூறுகின்றேன். சாதிக்கப்பட வேண்டிய காரியங்கள் இன்னும் அதிகம் உண்டு. நீங்களும் நானும் சேர்ந்து அவற்றைச் செய்து முடிப்போம். உங்களுக்கு நல் வாழ்வு ஓங்குக !

—ஜெனரல் மண்ட்காமரி, தன் படையினருக்கு
ஜூன் மாதம் 11-ம் தேதி விடுத்த செய்தி.

* * * *

"நேச நாடுகளைச் சேர்ந்த அனைவரும் மிகச் சிறந்த முறையில் போராடி யிருக்கிறார்கள். இயற்கையும் எதிரியும் விதிக்கும் தடைகளை யெல்லாம் பொருட் படுத்தாமல், போரில் வெற்றி யடைந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மிகக் குறுகிய காலத்திலேயே வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தம் வெற்றி பற்றி, பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுக்குத் தகும். அவர்கள் முன்னேறும் ஒவ்வொரு மைலினாலும், அவர்களுடைய உணர்ச்சிகள் உயருகின்றன.

—மிஸ்டர் பீட்டர் ப்ரேசர், நியூசிலந்து முதன் மந்திரி, ஜூன் 11-ம் தேதி
விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் வருஷம் ஜூன்மீ 16௳, வெள்ளிக்கிழமை | இதழ் 41

இரண்டாம் போர் முனை

"காகம் கரைந்ததும் பனம் பழம் விழுந்ததும்" என்பது பழ மொழி. இதற்கு இணையாகச் சொல்லலாம் ரோமாபுரி வீழ்ந்ததையும் இரண்டாம் போர் முனை ஆரம்பமானதையும். இவ் விரண்டும் தனித்தனி சம்பவங்களா? அல்லது ஒரே திட்டத்தின் இரண்டு அங்கங்களா? என்னும் கேள்வி பிறக்கலாம். தன் வலியும் மாற்றான் வலியும் சீர் தூக்கிப் போராடுதல் வீரர் கடன். இக் கடனை மிகத் திறம்பட நிறைவேற்றி யுள்ளார் ஜெனரல் அய்சினேவர். புராதனப் புகழ் வாய்ந்த ரோமாபுரி எப்போது வீழ்ச்சி யடையும் என்று அவர் முன்னதாகவே எதிர் பார்த்திருக்க வேண்டும். அந்தச் சமயம் தான் இரண்டாம் போர் முனை ஆரம்பிப்பதற்கு ஏற்ற பருவம் என்பது அவருடைய முடிவு. இந்தத் திட்டத்தை வகுத்தது ஜெனரல் அய்சினேவர் மட்டு மல்ல. மிஸ்டர் சர்ச்சில், அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட், மார்ஷல் ஸ்டாலின் ஆகியோர் அனைவரும் ஒப்புக் கொண்ட திட்டந்தான் இது. டெரானிலும் கெய்ரோவிலுந் தான் இது உருப் பெற்றது.

இந்த இரண்டாம் போர் முனை ஆரம்பமாகு முன்னதாக, ஜெர்மன் தொழிற் சாலைப் பகுதிகளை யெல்லாம் நாசக் களமாக்க வேண்டு மென்பது அத்திட்டம் போலும். அதன் படியே தான் சென்ற பல மாதங்களாக ஜெர்மன் தொழிற்சாலைகள் மீது குண்டு மழை பெய்து கொண்டிருந்தது.

இந்த இரண்டாவது போர் முனையைப் பற்றி மற்றொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். பிரான்சு வீழ்ச்சி யடைந்து ஜெர்மானியர் ஆதிக்கத்திற் குட்பட்டதன் பயனாக, பிரிட்டிஷ் படைகள் டன்கர்க்கை விட்டுக் கப்பலேறி இங்கிலாந்துக்குத் தப்பி வரும்படி நேரிட்டது. இது 4 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம். அதாவது 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 5-ம் தேதி இரவு நிகழ்ந்தது. சரியாக 4 வருஷங்களுக்குப் பிறகு, வட பிரான்சில் இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்கும் பொருட்டு, நேச நாட்டுப் படைகள் பிரான்சில் போய் இறங்கி விட்டன. அது மட்டுமா? ஜெர்மானியர்கள் தமக்குப் பாதுகாப்பாக அமைத்திருந்த மேற்கு மதில் அரணையும் துளைத்து விட்டன.

இந்த இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்கு முன்னதாக என்னென்ன முறைகளை நேச நாட்டினர் கையாண்டார்கள் என்பது இங்கே கவனிக்கத் தக்கது. ஜெர்மன் தொழிற்சாலைகளை நாசப்படுத்தினார்க ளென்று நாம் ஏற்கெனவே கூறினோம். ஜெர்மன் விமான பலத்தை ஒடுக்க வேண்டி, ஏராளமான புதுப் புது வகை விமானங்களைக் கட்டி, ஜெர்மனியின் இரக்கையை முறித்தார்கள். கடலில் அட்டகாசம் செய்து கொண்டிருந்த ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை மூழ்கடித்தார்கள். சப்ளை போக்கு வரவுப் பாதைகளை நாசப்படுத்தினார்கள். ஜெர்மன் மக்கள் மனதில் திகிலை யுண்டு பண்ணத் தக்க உண்மை விஷயங்களை வானொலிப் பிரசங்கங்கள் மூலம் உணர்த்தினார்கள். ஜெர்மானியர் வயப்பட்ட நாடுகள் பலவற்றிற்கு மீட்சி யளிப்பதாக வாக்குறிதி கூறி, அவர்களுடைய ஆதரவையும் ஓரளவிற்குப் பெற்றார்கள்.

இவ்வளவும் செய்தான பிறகு தான், இரண்டாம் போர் முனை யாரம்பம். ஜூன் மாதம் 5-ம் தேதி இரவு கடல் பெருங் கொந்தளிப்போடிருந்தது. காற்று வெகு அதிகம். இவை ஜெனரல் அய்சினேவரின் உறுதியை மாற்றவில்லை. 1,300 விமானங்கள் (பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்தவை) கிளம்பின. இங்கிலிஷ் கால்வாயைக் கடந்து போய், ஜெர்மானியர்கள் கடற்கரையில் அமைத்திருந்த அரண்களையும் கடற் படை பீரங்கிகளையும் மற்ற தளவாடங்களையும் நாசம் செய்தன. நேச விமானப் படையின் முன்னணியில் மட்டும் 11,000 விமானங்கள் இருக்கின்றன. பிரான்சைத் தாக்கிய 1,300 விமானங்கள் மட்டு மன்றி, சுமார் 1,000 விமானங்கள் படைகளையும் விமானக் குடையாளர்களையும் ஏற்றிக் கொண்டு வந்து, ஜெர்மன் பாசறைகளுக்குப் பின் புறம் இறக்கின. இவர்கள் முக்கியமான கேந்திர ஸ்தானங்களைக் கைப் பற்றிக் கொண்டனர். இதன் பயனாக ஜெர்மானியர்களுக்குள் பெருங் குழப்பம் ஏற்பட்டது. அடுத்தபடியாக தகுந்த பாதுகாப்புக்களுடன் கப்பற் படையையும் கொண்டு வந்து இறக்கினர். இதில் 4,000 கப்பல்களும் பல சிறு கப்பல்களும் பங்கு கொண்டதாக சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டிருக்கிறார். எதிரியின் அட்லாண்டிக் அரணைத் தகர்க்க வேண்டி, 600 யுத்தக் கப்பல்கள் கடுமையாகத் தாக்கின.

முதலாவதாக பிரான்சில் இறக்கப்பட்டது அமெரிக்கப் படைகள். இந்தப் படையினர் போர் முறையில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள். அரண்களையும் பதுங்கு மிடங்களையும் நாசப்படுத்த வேண்டியது அவர்களுக்கு இடப்பட்ட வேலை. தாக்கும் வேலையை பீரங்கிப் படையும் கப்பற் படையும் விமானப் படையும் மேற் கொண்டன. டாங்கிப் படைகளும் அவ்வப்போது தாக்கின. முன்னேறிப் போகும் படைகள் வழியில் அமைக்கப்பட்டிருந்த முள்வேலிகளை அப்புறப் படுத்த வேண்டியிருந்தது. நிற்க, டோவருக்கு எதிர் கரையிலுள்ள பாறைகள் மிகுதியான பகுதியில் தான், நேசப் படைகள் வந்திறங்கு மென்று ஜெர்மன் படைத் தலைவர் எதிர் பார்த்து, அந்தப் பகுதியை வெகுவாக அரண் செய்து வைத்திருந்தார். ஆனால் ஜென

ரல் அய்சினேவர் அவரை ஏமாற்றி விட்டார். மணற் பாங்கான நார்மண்டி என்னும் பகுதியில் தன் படைகளைக் கொண்டு போய் இறக்கி விட்டார். மற்றொரு வகையிலும் அவர் ஜெர்மன் படைத் தலைவரை ஏமாற்றி விட்டார். எப்படியென்றால், கடல் உரமாகவும் காற்று மிகுதியாகவும் உள்ள இரவில் இவ்வளவு பெரும் படை பெயர்ந்து வருமென்று சாதாரணமாக ஜெர்மன் படைத் தலைவர் எதிர்பார்த்திருக்கவே முடியாது. ஆனால் அய்சினேவர் படை யெடுத்தது அப்படிப் பட்ட இரவில் தான்.

ஜெர்மன் படைத் தலைவர்கள் தம் படைகளைத் திரட்டி ஆயத்தம் செய்து கொள்ளு முன்னதாக, நேசப் படைகள் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சீன் ஆற்றிற்கும் செர்பர்க் தீபகற்பத்திற்கும் இடையிலுள்ள பகுதியைக் கைப்பற்றி உறுதி செய்து கொண்டார்கள். மேலும் மேலும் முன்னேறிக் கொண்டு எதிரிகளைத் திகைக்க வைக்கிறார்கள். ஜெர்மானியருக்குப் பல திசைகளிலும் படு தோல்வி. நாஜிஸத்தின் நாச காலத்தின் அறிகுறிகள் தோன்றத் தலைப்பட்டு விட்டன. உலக மக்களின் மீட்சிக்கும் இது தானே ஏற்ற சின்னம்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ஜெர்மானியர் மனக் கொதிப்பு.

மழை காலம் ஆரம்பமாகும் வரை இரண்டாம் போர் முனை ஆரம்பமாகாது என்று பொதுவாக ஜெர்மன் மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். இப்போது நேசப் படைகள் மேற்கு அரண்களைத் தகர்த்து விட்டன என்ற செய்தியைக் கேட்டவுடனே அவர்களுக்கு மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. "நமது ஆகாய விமானப் படை என்ன செய்து கொண்டிருந்தது?" என்று சாதாரண ஜெர்மன் மக்கள் கேட்கின்றார்களாம். ஜெர்மன் எல்லைப்புரத்தை யடுத்து யுத்தம் நெருங்கும் போது, யுத்தக் கைதிகளாயுள்ளவர்களும், வெளி நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் தொழிலாளர்களும், கலகம் விளைக்காதபடி தடுக்க வேண்டி, ஜெர்மன் தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளிகள் எல்லாம் ஆயுதபாணிகளா யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட செய்திகள் பல, ஜெர்மன் பத்திரிகைகளில் வெளியாகின்றன; பெர்லின் வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும் பிரசங்கங்கள் வாயிலாகவும் வெளியாகின்றன. நடு நிலைமையிலிருந்து கவனிப்பவர் எழுதும் கட்டுரைகளிலிருந்தும் வெளியாகின்றன. இச் செய்திகளிலிருந்து ஜெர்மன் மக்களின் மனோ நிலை எவ்வளவு சிதைந்திருக்கிறது என்று தெளிவாகிறது. இந்தக் கட்டுரைகள் ஒரு குறிப்பிட்ட எண்ணத்தோடு தான் வெளியிடப் படுகின்றன. ஒன்று, மக்களின் நாட்டுப் பற்றைக் கிளர்ந்து விடும் பொருட்டு எழுதப்படலாம்; அல்லது, மக்கள் மனதில் அச்ச முண்டாகாதபடி தடுக்கும் பொருட்டு எழுதப்படலாம். ஆகவே, அந்தக் கட்டுரைகளை, உள்ளபடியே ஏற்றுக் கொள்ள முடியாது. அவை மிகைபடவோ, குறைபடவோ எழுதப் பட்டிருக்கலாம். நடு நிலைமை நாட்டினர் எழுதும் கட்டுரைகளோ, துலாக் கோல் போல் உண்மையைக் கூறுவனவாய் இருப்பதில்லை. ஏனென்றால், தாம் நாஜிகள் மீது கொண்டிருக்கும் வெறுப்பை அதில் கொட்டி விடுகிறார்கள். தம் வெறுப்பை உணர்த்தக்கூடிய சம்பவங்களையே அவர்கள் வெளியிடுகின்றனர். மேற்கே நேசப் படைகள் தாக்கப் போகின்றன என்பது பற்றி ஜெர்மன் பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை எழுதும் ஒரு சுவித்ஸர்லாந்து பத்திரிகை, அவர்கள் இச் செய்தியைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போயிருப்பதாகவும், அது பற்றி அக்கரையே கொள்ளுவதில்லை யென்றும் கூறியது. மேலும் அப்பத்திரிகை கூறியதாவது:—

> இது பற்றி பல உண்மையான மறுக்க முடியாத தகவல்கள் எம்மிடமிருக்கின்றன. அவர்கள் இங்கே வந்து பார்க்கட்டும் " என்று கோப்பல்ஸ் முழங்கிய போது, "அவர்கள் வந்தால் தானே!" என்று கூறி ஆச்சரியத்தோடு பெரு மூச்சு விட்டார்களாம்.

ஜெர்மனியன் எதிர்ப் பிரசாரம் உட்பட எல்லா வகைப் பிரசாரமும் எவ்விதத் தடையுமின்றி தாராளமாக நடைபெறுகிறது. இந்தப் பிரசாரம் பல வாரங்கள் நடை பெற்றும், பொது மக்கள் மனதைக் கவரவில்லை. அவர்கள் இந்தப் பிரசாரங்களைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் விட்டார்கள். பெரிய நகரங்களிலுள்ள பொது மக்களின் மனோ நிலை எப்படி இருக்கிற தென்று ஜெர்மன் இரகசியப் போலீசார் ஒரு கதை சொல்லுவார்கள்: ஹிட்லருடைய 'ஸ்டார்ம் ட்ரூப்' படையினர் மிகவும் மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பெர்லின் போன்ற நகரத்தில் இரண்டு டஜன் பேர் வழிகள் மாயமாக மறைந்து விடுவார்களானால், அந்த துரதிர்ஷ்டசாலிகளுக்கு என்ன நேர்ந்த தென்று இலகுவில் அனுமானித்துக் கொள்ளலாம். இந்தக் காரணம் பற்றித் தான், படையினர் என்னதான் வீரர்களா யிருந்த போதிலும், அவர்களுடைய உள்ளத்தே ஓர் உணர்ச்சி மேவி யிருக்கிறது. ஓயாத கொடுமைகளுக்கு உள்ளாகி யிருப்பதை விட, கொடுமைகளினால் ஒழிவதே மேல் என்பது தான் அவர்களுடைய உணர்ச்சி. நேச நாட்டினர் மட்டும் வருவார்களே யானால், எல்லாம் முடிவடைந்து விடும் என்று இந்த மக்கள் நினைக்கிறார்கள். ஐரோப்பாவின் முக்கால் பகுதியை வென்றவர்கள் இவர்கள் தான்.

நேச விமானத் தாக்குதல்களின் பலா பலன்கள்.

சென்ற மே மாதம் 23-ம் தேதி சுவித்சர்லாந்திலுள்ள மற்றொரு பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளி வந்தது. அதை எழுதியவர், சமீபத்தில் ஜெர்மனியிலிருந்து திரும்பியவர். நேச நாட்டு விமானங்களால் ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைப் பகுதிகளுக்கு எந்த அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருக்கிற தென்று விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். என்றாலும் இந்த விமானத் தாக்குதல்களால் தொழிலாளர்களின் மனோ நிலை சிதையவில்லை யென்றும், குறிப்பிடுகிறார். விமானத் தாக்குதல்களின் நோக்கம், மக்கள் மனோ நிலைமையைச் சீர் குலைப்பது என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார். உண்மையிலேயே ஜெர்மன் யுத்தத் தொழில்களையும் ரயில்வேக்களையும் நாசஞ் செய்வது தான் அதன் நோக்கம். நகரங்களிலுள்ள தொழிலாளர்கள் மகா மன உறுதியோடிருப்பதாக அக் கட்டுரையாளர் அவர்களைப் பாராட்டுகிறார். இதைத் தகர்க்கும் பொருட்டுத் தான், இடை விடாது விமானத் தாக்குதல் நடைபெறுகின்ற தெனக் கூறுகிறார். அவர் மேலும் கூறியதாவது:—

> ஒரு விமானத் தாக்குதலைச் சமாளிப்பதற்கும், மாதக் கணக்கான விமானத் தாக்குதல்களைச் சமாளித்துக் கொண்டிருப்பதற்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. உண்மையிலேயே வாழ்க்கையில் முக்கியமாக உள்ளது விமானப் போர்; எல்லோரும் இது பற்றியே தான் பொதுவாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் முக்கியமான சம்பவங்களும் அரசியலும் கூட மறைக்கப்பட்டுப் போகின்றன.

ஜெர்மன் தொழிற்சாலைகளில் பிற நாட்டுத் தொழிலாளிகள்.

ஜெர்மன் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களில் பெரும்பான்மையோர் பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப் பட்டவர்கள். ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் இவர்களில் 65 லட்சம் பேர்கள் கொண்டுவரப் பட்டனர். இவர்கள் மீது போலீசார் செலுத்தி வந்த ஆதிக்கம் ஓரளவிற்குத் தளர்த்தப்பட்டிருப்பது. குறிப்பிடத் தக்கது. இந்தத் தொழிலாளர்களைத் தாம் எவ்வாறு நடத்துவதாக ஜெர்மானியர்கள் கூறிக் கொள்ளுகிறார்கள் என்று சற்று கவனிப்போம். சமீபத்தில் ஜெர்மனியிலிருந்து வானொலிப் பிரசங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

கல்விமான்களின் கடமை என்ன?

பெரும் போரும் சிறு கதைகளும்

ஓய்ந்த நேரத்தில் ஊக்கம் ஊட்டுவன

சென்னை இந்து மத தர்ம பரிபாலன போர்டு கமிஷ்னர், ராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்,
சென்னை அகில இந்திய ரேடியோவில் 1944-ம் ஞு மேமீ 31உயில் பேசியது.

இக்காலத்தில் எதை எடுத்தாலும் சாவதானமாக நினைக்கவோ, பேசவோ, செய்யவோ முடிகிறதா? குழந்தை முதற் கொண்டு பாட்டியார் வரைக்கும் "நேரம் ஏது," "எனக்கு நேரம் இல்லை" என்ற ஒன்றையே சொல்லுகிறார்கள். அவ்விதம் முன் காலத்தில் இருந்த சாவதான நேரம் இப்போது எங்கே போயிற்று? அதற்கு விடையாக பொது மக்களுடைய மனப் பான்மை மாறி வருகிறதினால் அம் மாறுதலோடு அதுவும் போயிற்று என்பர்.

கால நிலையில் மாற்றம்

முன் காலத்தில் ஒரு காவியம் அல்லது இதிகாசம் என்றால் 24,000 சுலோகம் அல்லது 12,000 பாட்டு என்பர். அதனை இவெல்லாம் வாசித்தாலும் முடிக்கப் பல மாதங்கள் பிடிக்கும். ஒரு நவீனகம் என்றால் 500 பக்கம் இருக்கும். அதனை முடிக்க ஒரு வாரம் வேண்டும். இக்காலத்தில் அவைகளை வாசிக்க முடியுமா? நம்மால் ஆகுமா? யார் அதனை வாசிக்கப் பொறுமையுடன் ஒரு இடத்தில் உட்காருவார்கள். புகை வண்டியிலோ, மின்சார வண்டியிலோ, விசை வண்டியிலோ போகையிலே பத்து நிமிடங்களில் வாசித்து முடிக்கும் கதைகளையே இக்காலத்தில் விரும்புகிறார்கள். உடம்பை வளர்க்க ஊதியம் பெறுவதிலே மனம் நாடுமே ஒழிய, படிப்பதிலே அதிக நேரம் செலுத்த மனம் நேராடாது. கால தேச வர்த்தமானங்கள் அவ்வாறு மாறி விட்டன அல்லவா?

மனிதனுடைய எண்ணப் போக்கு

உலகப் போக்கிலே சாவதானத்திற்கு மாறாக விரைவும், நீட்டிச் சொல்லும் விவரங்களுக்கு மாறாகச் சுருங்கச் சொல்லுதலும், பல நேரம் பார்த்துச் சுவைக்கும் சித்திரக் கலைக்கு மாறாக ஒரே விநாடியில் நெஞ்சில் படியும் ஒளி ஒலிப் படங்களும் ஏற்பட்டு விட்டன. மனிதனுடைய எண்ணப் போக்கு அவ்வாறு மாறுவதினாலே பெருங் கதைகள் சிறு கதைகளாகி சுருங்கி விடுகின்றன.

சாதாரண உலக விவகாரங்களிலேயே இவ்விதம் இருக்க, போர் முனையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? போர் முனையில் எது எடுத்தாலும் விரைவில் நுட்ப அறிவை வழங்குதலுமே முக்கிய கோட்பாடுகள் ஆகும். ஆகவே போர் முனையில் ஈடுபடும் மக்கள் சாவதானம், நிதானம், பொறுமை இவைகளை ஏனையோர்களுக்கு விட்டு விட்டு, விரைவு, நுண்ணிய அறிவு அவைகளின் பிரயோகம் இவைகளையே நாட வேண்டும். ஆகவே, அவர்களுக்குத் தகுந்த நூல்கள் தான் பயன் படும். பொது மக்களுக்குப் பத்து நிமிடக் கதை வேண்டும் என்றால், போர் வீரர்களுக்கு 5 நிமிடக் கதைகளே வேண்டும். ஆகையால் தான் போர் வீரர்கள் சிறு கதைகளை மிகவும் விரும்புகிறார்கள்.

சிறு கதைகளே வேண்டும்

ஒரே ஒரு கருத்து, அதுவும் தெளிவான கருத்து, உறுதியான கருத்து, உலக அனுபவக் கருத்து. அதை சொல்லும் விதமோ சுருக்கமாகவும், தெளிவாகவும், நெஞ்சைக் கவரும்படியாகவும் இருக்க வேண்டும். அழகிய சித்திரமோ, சிறந்திடும் காட்சியோ எவ்வாறு கண்ணை வசீகரிக்குமோ, அதைப் போலப் படிப்பவர்களை இழுத்து பிடிப்பதாக அது இருக்கவேண்டும். ஒரு முறை தொடங்கிய பின் முடியும் வரை அதனைக் கீழே வைக்க மனம் வரக் கூடாது. பலவாறு துன்பப்படக் கூடிய நெஞ்சையும், பல வேலைகளில் ஈடுபடும் வாழ்க்கையையும், சில நிமிடங்கள் ஓய்வும் உற்சாகமும் கொடுக்கும்படியாகவும் மற்ற தினசரி நடவடிக்கைகளை மறந்து போகச் செய்யத் தக்க தாயும் அது இருக்க வேண்டும். இந்த குணங்களைக் கொண்ட ஒரு கதையைத் தான் சிறு கதை என இக்கால வழக்கத்தில் வழங்கி யிருக்கிறார்கள். ஆசிரியர் கொண்ட கருத்தை உண்மையாக நடந்த ஒரு சரித்தி த்தைப் போல சில அவசியமான மானிட உலகப் பாத்திரங்களைக் கொண்டு நடிப்பித்துக் காட்டுவதே சிறந்த கதையாகும். அதுவே மக்களுக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் தரக் கூடியது. ஆம், சமீபத்தில் சிறு கதைகளுக்கு மிகுதியாகப் பெருமையும் வாஞ்சையும் ஏற்பட்டு விட்டது. அது காலத்திற்கு ஏற்ற கோலமாகும். இக் கிளர்ச்சி எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் உண்டு. பத்திரிகைகளும் மாதாந்தி ப் பத்திரிகைகளும் அதிகமாகச் சிறு கதைகளை எடுத் தாண்டு வருகின்றன. காகிதப் பஞ்சமோ அக்கிளர்ச்சிக்கு அதிக ஆதரவு தருகிறது. கதைகள் நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே வருகின்றன. சில நாட்களில் ஒரு பிரிவில் (Para) அவை அடங்கி விடுமோ என்று எண்ணவும் வேண்டி யிருக்கிறது. போர்க் காலத்திற்கு அச்சுருக்கத் தன்மை அவசியமே அல்லவா?

முற்காலச் சிறு கதைகள்

ஆனால் சிறு கதைகள் முன்னாளில் இல்லையோ என்றால், அவை இருந்தன என்றே கூறவேண்டும். முற்காலத்துப் பஞ்ச தந்திரக் கதைகள், அங்கதம் என்ற பகுப்பில் உள்ள சிறு கதைகளே ஆம், அங்கதம் என்றால் (Satire) என்பது ஆகும். ஒரு கருத்தை மறை பொருட் கதையாக உரைப்பது அது ஆகும். அதனாலே கருத்து வெகு உருக்கமாகத் தோன்றும் எனலாம்.

ஒரு குயவன் இருந்தான். ஒரு நாள் சூளை போடும்போது ஒரு ஓடு வெடித்து நெற்றியில் பட்டது. அது காயமாகி ஆறி விட, போரில் பட்ட வடுப்போல் தோன்றியது. பிறகு நாட்டில் பஞ்சம் வர, வேறு நாட்டிற்குச் சென்று ஒரு அரசனிடம் வேலைக்கு அமர்ந்தான். அரசனோ நெற்றியில் வடுவைப் பார்த்து விட்டு அவனை ஒரு போர் வீரன் என எண்ணி அவனைச் சேனைத் தலைவன் ஆக்கினான். சில மாதம் கழித்து அந்நாட்டில் ஒரு போர் நிகழ்ந்தது. புதுத் தலைவனை நோக்கிப் போருக்கு ஆயத்தமாகச் சொல்லி "எந்தப் போரில் அக்கீர்த்தி பெற்ற வடு பட்டது" என வினவினான். குயவனோ தான் சூளை போடும் போது வெடித்த ஒரு ஓடு நெற்றியில் பட அது காயம் ஆகிப் பின் ஆறினதினால் ஏற்பட்ட வடு அது என்றும், தான் எப் போரும் புரிந்த தில்லை என்றும் கூறினான். அரசன் தான் ஏமாந்ததை எண்ணி வெட்கப்பட்டு குயவனை வெளி யேறும்படிச் சொன்னான். குயவனோ "நான் என்ன பயங்காளியா, எனக்கு வல்லமை இல்லையா. என் கை கால்களை கட்டி இ ணகளத்தில் போடுங்கள். அப்போது என் அஸ்தலாகவத்தைப் பாருங்கள் (கை வல்லமை) என்றான். அரசன் அவன் அறியாமையைக் கண்டு சிரித்து, அவனை உடனே அகற்றினான். இதுவே முற்காலச் சிறு கதைக்கு ஒரு எடுத்துக் காட்டு ஆகும்.

இனி இடைக் காலங்களில் அநேகக் கதைகள் நம் நாட்டில் வழங்கி வந்திருக்கின்றன. அக்பர்-வீ பலன் கதைகள், இ ாயர் அப்பாஜி-தெனாலி ராமன் கதைகள், திராவிட பண்டை நாட்டுக் கதைகள் முதலியவைகளைக் காண்க.

நகைச் சுவை கதைகள்

ஒரு வண்ணான் தன் கெட்டுப் போன கழுதைக்குப் பதிலாக மழைக்கு ஒதுங்கின ஒரு புலியைக் கட்டிய காரணத்தினால் வீரனாகக் கருதப்பட்டு, அரசனிடம் சேனையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, பின் போர் நிகழ்கையில் தானே நேராகக் குதிரை ஏறிப் பின் பயந்துக் கொண்டு ஒரு மரக் கிளையைத் தாவிப் பிடிக்க, அதுவும் தன்னோடு முறிந்து வர அதனைப் பார்த்த பகைவன் ஓடி ஒளிந்து கொண்ட கதையே ஒரு நகைச் சுவை ததும்பிய கதை ஆகும். இது இடைக்காலச் சிறு கதையின் ஒரு எடுத்துக் காட்டாகும். இனி தற்காலத்திலோ பலவிதமான கதைகள் கற்பனை செய்யப்படுகின்றன. அந்தந்த நாடு, காலம், செயல், தொகுதி இவைகளுக்கு ஏற்றவாறு அவைகள் அமைந்துள்ளன.

போர் ச்ம்பந்தமான கதைகள்

போர் தொடங்கிய பிறகு போர் சம்பந்தமாகப் பல கதைகள் வெளி

வருகின்றன. துப்பு அறிதல், ஆள் சேர்க்கை, வீரச் செயல், காதல் பெருமை, இழிவுச் செயல், பயங்காளித்தனம், நேர்மை, ஒழுங்கு. நன்றி காட்டல், நன்றி மறத்தல், பழிக்குப் பழி, சதி ஒற்று, வேவு, முதலிய இயக்கங்கள் பொருட் கொள்ளை, யந்திர அமைப்பு, அரசியல் முளைப்புகள் முதலிய பல குணங்களைக் காட்டும் சிறு கதைகள் வெளி வருகின் றன. இவைகளை 'யுத்த சஞ்சிகை'யில் வெகுவாக வெளிப்படுத்துகின்றனர். அவைகளை வாசிக்கும் போர் வீரர்கள் மிகவும் உற்சாகம் அடைகின்றனர். நாட்டின் எண்ணப் போக்கை நன்ருக அறிகின்றனர். தம் கடின வேலையின் நடுவில் ஓய்வும் உற்சாகமும் அவைகள் தருகின்றன. ஆகவே, இக் கதைகள் போர் வீரர்களை உற்சாகம் மூட்டி மீண்டும் போர் புரியத் தூண்டுகின்றன. அவ்விதச் சிறு கதைகளுக்கும் ஒரு எடுத்துக் காட்டு தருவோமாக!

ஒரு எடுத்துக் காட்டு

ஒரு சிறு கிராமம், மாலை நேரம், குளிர்ந்த காற்று அடிக்கிறது; ஊருக்கு வெளியே ஒரு வெளியிடம்; சிறு பையன்கள் விளையாடுகின்றனர்; பெண்பிள்ளைகள் கும்மி அடிக்கிருர்கள். அவர்கள் பாடும் அழகிய பாடல்கள் ஆனந்தம் விளைவிக்கின்றன. மாமரத்து அடியில் ஊர் மாதர்கள் கூடுகிருர்கள். பகல் வேலை முடிந்த பிறகு இளைப்பாறுகிருர்கள். இயற்கை அழகை அனுபவித்துக் கொண்டே பேசிக் கொள்ளுகின்றனர். கணவர்கள் போருக்குச் சென்ற ஞாபகம் வருகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கணவன்மார்கள் அனுப்பிய பரிசுகளைப் பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் முகங்களில் மகிழ்ச்சியே தவிர துயரம் சிறிதும் இல்லை. ஏன்? வீரத் தமிழ் அன்னையின் சந்ததியார் அல்லவா? ஒருத்தி பர்மியர் பொம்மையை எடுத்துக் காட்டுகிருள். மற்ருெருத்தி மலேயர் செய்த மர யானைக் குட்டியைக் காட்டுகிருள். மற்ருெருத்தி ஜப்பானியர் சப்பை மூக்குப் பதுமையை காட்டுகிருள். ஒரு பெண்ணே தனக்கு யாதும் வரவில்லையே, என்ன காட்டுவது, எவ்வாறு பேசுவது என்று ஏங்குகிருள். அப்போது எதிரே ஒரு சேவகன் வருகிருன். அவன் தபால் சேவகன். வந்ததும் 'யார் அம்மா, சுப்பம்மாள்?" என்ருன். ஏங்கிக் கொண்டிருந்த பெண்ணே, "நான் தான், சுப்பம்மாள்; என்ன செய்தி?' என்கிருள். "அம்மா, உனக்கு ஒரு பார்சல் வந்திருக்கிறது" என்று சொல்லி ஒன்றைக் கொடுக்கிருன். சுப்பம்மாள் அதனைப் பெற்றுக் கொண்டு கையெழுத்துச் செய்து அவனை அனுப்பி விட்டு, அதனைத் திறக்கிருள். அதில் அழகான சில விருதுகளும், ஒரு பதக்கமும், ஒரு கடிதமும், சில பணங்களும் இருக்கின்றன. கடிதம் வாசிக்கிருள்.

கிராமத்தில் திருவிழா

"அன்புள்ள சுப்புக்கு, ஆசிர்வாதம். நான் நன்ருக இருக்கிறேன். ஜப்பானியரோடு வெகு சாகசத்துடன் போர் புரிகிறேன். ஒரு ஜப்பானியத் தலைவனைச் சுட்டுக் கொன்று அவன் மார்பில் அணிந்திருந்த விருதுக்களை வென்றேன். அவைகள் மிக அருமையானவைகள். நம் நாட்டிற்கே அவ் வெற்றி பெருமை தருவது. அதிகாரிகள் உத்தரவு பெற்று அவைகளை அனுப்பி யிருக்கிறேன். அவைகளை நம் குடும்பப் பொக்கிஷமாக வைக்க வேண்டும். நம் குழந்தைகளுக்கு அவைகளை அணிந்து பார். அழகாக இருக்கும். எனக்கு ஒரு பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அன்புள்ள,
போர் முனை. முனியன்,
ஜமேதார்."

இதனை வாசிக்கவே அவள் முகம் மலர்ந்தது, மற்ற பெண்களை விட, தான் பெருமை பெற்றதாக எண்ணினுள். மற்றவர்களும் அவளைக் கொண்டாடினுர்கள். அன்று அக் கிராமத்தில் ஒரே திருவிழா மயமாக இருந்தது.

இவ்விதம் மகிழ்ச்சி தரக் கூடிய கதைகள் போர் முனையில் வெயர்வை சிந்தப் பாடுபடும் வீரர்களுக்கும் கிராமங்களில் ஏங்கி இருக்கும் அவர்கள் மனைவி மக்களுக்கும் ஒரு வினாடியாவது இன்பம் தரக் கூடியவை அல்லவா? ஆகவே நமது நாட்டுக் கல்விமான்கள், அழகிய சிறு கதைகளை உண்டு பண்ணிப் போர் முயற்சியை ஆதரிப்பார்களாக!

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

ஹங்கேரிய மக்களுக்காகச் செய்யப்பட்டது. அதில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப் பட்டது :—

"ஜெர்மனியிலுள்ள பிற நாட்டுத் தொழிலாளர்கள், தாம் ஒரே குடும்பத்தினர் போல் கருதுவதாகவும், நல்ல விடுதிகளில் சுகமான உணவருந்தி நன்ருகப் பராமரிக்கப் படுவதாகவும் கருதுகிருர்கள்."

ஒரு மாதத்திற்கு முன்பு தொழில் மந்திரியான சாக்கெல் ஹாம் பர்க் நகரத்தில் செய்ததோர் பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது :—

"தேசிய சமதர்மத்தின் உள் ஆதிக்கத்தில் மூழ்கி யிருக்கும் பிற நாட்டுத் தொழிலாளர்கள் தம் தொழில் முயற்சிக்கு ஆதாரமாக தேசீய சமதர்மத்தைத் தான் கொண்டிருக்கிருர்கள். தம்மைப் போன்ற ஜெர்மன் தொழிலாளர்களோடு சமமாக உயர வேண்டுமென்று ஆசை கொள்ளுகிருர்கள். ஒரு சிலர் உயர்ந்து விட்டார்கள். பெரும்பாலோர் ஜெர்மானியர்கள் பொருளுற்பத்தி செய்யும் அளவிற்குத் தாமும் உற்பத்தி செய்கிருர்கள். இதற்கு முக்கியமாக வேண்டுவன (1) நல்ல முறையில் நடத்துவது, (2) போதுமான அளவு உணவு, (3) வசதியான விடுதி. ஐந்தாம் படை வேலை செய்கிறவனைத் தண்டிக்கவேண்டியது தான். என்ருலும் மன ஒற்றுமையோடிருக்கும் பிற நாட்டாரிடம் நாம் நேர்மையாகத் தான் நடந்து கொள்ள விரும்புகிருேம்".

ஒரு செய்தி ஸ்தாபனம் சென்ற மே மாதம் 4-ம் தேதி தூரக் கிழக்கு நாடுகளுக்கு அனுப்பிய செய்தியில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறது :—

"இப்போது ஜெர்மனியில் வேலை செய்து கொண்டிருக்கும் மாஜி ருஷ்ய பிரஜை ஒருவராவது 5-ம் படை வேலை செய்ததுமில்லை, பொதுவுடைமைப் பிரசாரம் செய்ததுமில்லை. அவர்கள் உற்பத்தியும் அதிகரித்திருக்கிறது."

உள்நாட்டிலேயே ஆபத்து: அதிகாரிகள் கவலை

ஜெர்மனியில் சுற்றுப் பிரயாணம் செய்த ஒரு ஸ்வீடிஷ் பிரயாணி ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கும் விவரங்கள் இதற்கு முற்றும் முரணு யிருக்கின்றன. அவர் கூறியதாவது :—

ஆயிரக்கணக்கான ருஷ்ய ஆண்களும் பெண்களும் தம் வேலைத் தலங்களிலிருந்து மாயமாய் மறைந்து விடுகிருர்கள். இவ்வாறு மறைந்தவர்களின் எண்ணிக்கை 50,000 இருக்குமென்று ஒரு நம்பத் தகுந்த செய்தி கூறுகிறது.

"டியெடாட்" என்னும் பத்திரிகையின் பெர்லின் நிருபர், ஜெர்மன் உற்பத்தியில் 8 சதவிகிதம் குறைந்துவிட்டதற்கு பிற நாட்டுத் தொழிலாளர்களின் 5-ம் படை வேலை தான் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிருர். தன்னிடம், ஒரு ஜெர்மன் தொழிற்சாலை முதலாளி, பிற நாட்டுத் தொழிலாளிகளின் தொல்லைகள் சகிக்க முடியவில்லை யென்றும் அவர்கள் உதவியின்றி எதுவும் முடியாதென்றும் கூறியதை ஆதாரமாகக் கொண்டு தான் அவர் எழுதிருராம். பிரிட்டிஷ் விமானப் படைகள் வரு முன்னதாவே, பிற நாட்டுத் தொழிலாளிகள் தம் தொழிற்சாலைகளுக்குத் தீமூட்டி அடியோடு நாசம் செய்துவிட்டார்கள். இதை இலக்காகக் கொண்டு நேச நாட்டு வெடிகுண்டு விமானங்கள் தம் வெடிகுண்டுகளை வீச இலகுவா யிருக்கிறது.

உள்ளூருக் குள்ளேயே இருக்கும் இந்தப் பெரும் ஆபத்தைக் குறித்து அதிகாரிகள் மிகவும் கவலை கொண்டிருக்கிருர்கள். சமீபத்தில் நாஜி உத்தியோகஸ்தர்கள் கூட்டமொன்று பெர்மன் என்னுமிடத்தில் நடந்தது. ஏராளமான பிற நாட்டுத் தொழிலாளர்கள் இருந்தபோதிலும், அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டும்பொருட்டு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று பொது மக்கள் நம்பத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அக் கூட்டத்தில் அவர்கள் முடிவு கட்டினர்.

உள்ள நிலைமையைப் பார்த்தால் திடீரென்று ஜெர்மன் உள்நாட்டு நிலைமை குலைந்துவிடுமென்று சொல்லுவதற்கில்லை; ஆனல் படிப்படியாகக் குலைந்து விடுவது உறுதி.

ஐரோப்பியக் கோட்டை மேல் பெருந் தாக்குதல்

டாக்டர் கோபல்சின் பிரசார ஆராய்ச்சி

ஹிட்லர் 1940-ல் கூறியதும், நேச தேசத்தார் 1944-ல் நடத்தியதும்

பெருந் தாக்குதல்களுக்கு ஆயத்தம்

மிஷின் பீரங்கிக்காரர்கள் அணிவகுப்பை மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் பார்வை யிடுகிருர்.



தளவாட உற்பத்தி சாலையில் பீரங்கி வரிசை

டாக்டர் கோபல்சினுடைய பிரசாரத்தைப் பற்றி கவனிக்கும்போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது. "புலி வருகிறது, புலி வருகிறது" என்று ஒரு பையன் பொய்க் கூச்சலிட்டான்; வந்தவர்களை ஏமாற்றி, ஏளனம் செய்தான். கடைசியில் உண்மையாகவே புலி வந்தது; பையன் கூச்சல் பயனில்லாமற் போய்விட்டது ஏளனம் செய்த பையன் இரையானுன் புலிக்கு! டாக்டர் கோபல்சுக்கும் இந்தப் பையனுக்கும் ஒரு வித்தியாசம் ண்டு. "புலி வருகிறது, புலி வருகிறது" என்று டாக்டர் கோபல்ஸ் கூச்சலிடவில்லை; "புலியாவது வருகிறதாவது?" என்று அவர் ஏளனக் கூச்சல் செய்தார். இரண்டாவது போர் முனையைப் பற்றி அவர் செய்த பரிகாசம் இவ்வளவவ்வளவல்ல.

அட்டகாசமும் பட்டபாடும்

ஐரோப்பாவில் நேசதேசத் துருப்புகள் கால்வைக்கமுடியாது என்று பர்லின் நிலையமும் அதனுடன் ஒத்தூதும் இதர அச்சு நிலையங்களும் அடிக்கடி கூறிக் கொண்டு வந்தன. "ஹிட்லருடைய அசைக்க முடியாத கோட்டைக்குள் யாரும் பிரவேசிக்க முடியாது" என்று அவை அட்டகாசம் செய்து வந்தன. மேற்கிலிருந்து படையெடுப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரஷ்யாவைக் குறித்து கோபல்ஸ் செய்த ஏளனம் கொஞ்சமல்ல. "ஐரோப்பாவைப் படையெடுப்பது நடக்காத காரியம். ரஷ்யா வீண் கனவு காண்கிறது" என்று பல தடவை அச்சு நிலையங்கள் பரிகாசம் செய்திருக்கின்றன.

நோக்கம் என்ன?

இந்தப் பிரசாரத்தின் நோக்கம் ரஷ்யாவுக்கும் இதர நேச நாடுகளுக்கும் மனக் கசப்பு ஏற்படுத்த வேண்டுமென்பது இதல்லாமல், பிரிட்டனும், அமெரிக்காவும் ஐரோப்பாவின்மேல் படையெடுப்பதற்கு இயலாது; அதற்கு வேண்டிய பலம் அவைகளிடம் இல்லை, எந்தக் காலத்திலும் அதற்குத் தகுதியான பலம் அவைகளுக்குக் கிடைக்காது என்ற விதமாக வேறொரு முறையிலும் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது.

கோபல்சின் பழைய பல்லவி

இதற்கு உதாரணமாக 9 நாட்களுக்கு முன் செய்யப்பட்ட ஒரு ஒலிபரப்பை எடுத்துக்கொள்வோம். இது பர்லினில் இருந்து செய்யப்பட்டதால், அதன் சீட நிலையமாகிய ஜப்பானிய ஆதிக்க நிலையத்திலிருந்து செய்யப்பட்டது. சென்ற மே மாதம் 30-ந் தேதி, சைகோனிலுள்ள 'ப்ரீ இன்டியா ரேடியோ', "வெகுகாலமாக வாக்களிக்கப்பட்ட இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்க முடியாமல் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் சும்மா இருக்கிருர்கள்"—என்று கூறி யிருக்கிறது. ஐரோப்பாவின் மேல் படை யெடுக்க முடியா தென்பது கோபல்சின் பழைய பல்லவி. "இங்கிலாந்தினுல் அசைக்க முடியாத அவ்வளவு பலமான நிலையில் நாங்கள் இருக்கிருேம்" என்று அவர் 1940-ம்வருஷ டிசம்பர் 28-ந் தேதி பெருமை யடித்துக் கொண்டார். இந்தப் பெருமைப் பிரசாரம் ஏறக் குறைய தொடர்ச்சியாக இதே ராகத்தில் நடைபெற்று வந்திருக்கிறது. சைகோன் நிலைய ஒலிபரப்பைப் பற்றி குறிப்பிடடோமல்லவா?—அதே தினத்தன்று "ஆசாத் ஹிண்ட்" என்ற ஜெர்மன் நிலையம் ஜெர்மனியின் பலத்தைப்பற்றி சிலாகித்தும், பிரிட்டன் பலத்தைப் பற்றிக் குறைவு படுத்தியும் கூறியிருக்கிறது. மே மாதம் 30-ந் தேதி செய்த ஒலிபரப்பில்:—

"யுத்தம் ஆரம்பித்து ஐந்து வருஷங்களுக்குப் பிறகும் பிரிட்டன் தன்னுடைய நிலைமையில் முன்னேற்ற மடையவில்லை. ஆனுல், ஜெர்மனியோ தனனை மிகவும் பலப்படுத்திக் கொண்டிருக்கிறது; அதுமாத்திரமல்ல, ஐரோப்பாவில்

நேச தேசத்தார் பெருந்தாக்குதலுக்கு ஆயத்தம்

மோட்டார் ஓட்டிகள் பயிற்சி இரவும் பகலும் தரையிலும் நீரிலும் நடைபெறுகிறது.

உள்ள தன்னுடைய நிலைமையையும் பலப்படுத்திக் கொண்டுவிட்டது,'' என்று ஜெர்மன் நிலையம் கூறுகிறது.

படையெடுப்புத் தடமாற்றமா ?

இப்படிப்பட்ட பிரசாரம் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் செய்தால், ஏதோ போகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால், 1944-ம் வருஷத்தில் இரண்டாவது போர் முனை ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன், இம்மாதிரியான பிரசாரத்தை கோபல்ஸ் செய்வாரானால், அவருடைய மனம் படையெடுப்புத் தடுமாட்டத்தில் தவறி விட்டதென்று நினைக்க வேண்டும்; அல்லது, எத்தனையோ பொய்ப் பிரசாரமாயிற்று; அதில் இதுவும் சேரட்டுமே, இதினாலென்ன நஷ்டம் என்ற எண்ணமாயிருக்க வேண்டும். "கடனோடு கடனாகிறது; எல்லாப் பலகாரத்தையும் நெய்யில் சுடு'' என்றானாம் ஒருவன் அவன் மனைவியிடம். அதைப் போல், பொய் மூட்டையோடு இன்னும் கொஞ்சம் சேர்ந்தால் சேரட்டுமே என்று கோபல்ஸ் நினைத்தார் போலும்!

ஓட்டமும் நிறுத்தமும்

அவருடைய கணக்கில் அவர் கவனம் வைத்தாரே ஒழிய, உலகத்தார் அதில் தப்புக் கண்டுபிடிக்கக் கூடும் என்பதை அவர் உணர்ந்தாரில்லை. இப்போதுள்ள நிலைமையில் ஜெர்மனியின் பலமும், ஐரோப்பாவில் ஜெர்மனிக்குள்ள பலமும், எந்த ஸ்தானத்தில் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். கிழக்கில் ரஷ்யாவிலிருந்து ஜெர்மனியர்கள் துரத்தியடிக்கப் பட்டார்கள்; அவர்கள் பின் வாங்கி ஓடிய ஓட்டம் ருமேனியாவுக்குள் புகுந்த பிறகு தான், ஒருவாறு நிறுத்தப்பட்டது. ஐரோப்பவைப் பற்றித் தானே இப்போது குறிப்பிடுகிறோம்; ஆகையால் ரஷ்யாவைப் பற்றி பேசுவதை நிறுத்திக் கொள்ளலாம்.

கோட்டை கொத்தளம் என்னவாயின ?

இடலியை எடுத்துக் கொள்வோம். ஜெர்மனியினுடைய பிரமாதமான பலமும் அசைக்க முடியாத கோட்டை வெளியரண் கோடுகளும் கொத்தளங்களும் என்னவாயின? குஸ்டாப் லைன் என்ற பாதுகாப்பு அரண் தகர்க்கப்பட்டது; அதற்குப் பின் ஹிட்லர் லைன் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. "தலை தப்பினால் போதும், ரோம் நகரம் கூட நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்,'' என்று சொல்லுவது போல, ரோம் நகரத்தையும் கைவிட்டு ஹிட்லருடைய வீரர்கள் இடலியில் வடக்கு நோக்கிப் பின் வாங்கி ஓடுகிறார்கள்.

ரோமல்-கோபல்ஸ் தகராறு

இடலியில் ஜெர்மன் துருப்புகளுடைய கஷ்டமான நிலைமையை கோபல்ஸ் முன்னமேயே உணர்ந்தார்; கூடிய சீக்கிரம் மேற்கிலிருந்து நேசதேசப் படையெடுப்பு வரப்போகிறது என்பதை அறிந்தார். அதற்குத் தகுந்த மாதிரி தன்னுடைய பிரசாரத்தை அமைக்க முயன்றார். ஆனால் இதற்கு முன் அவருக்கும் பீல்டு மார்ஷல் ரோமலுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. சென்ற மாதம் முதல் வாரத்தில் "தாஸ்ரைஷ்'' என்ற தம்முடைய வாரப் பத்திரிகையில் அவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். ஜெர்மன் மக்களுக்குத் தைரியமும் ஆறுதலும் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அக்கட்டுரை எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஏனென்றால், "வாஷிங்டனிலும் லண்டனிலும் உள்ள அரசியல் தந்திர நிபுணர்கள், இரண்டாவது போர் முனையைப் பின்னால் தள்ளி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்,'' என்று ஜெர்மனியர்களுக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லுவதைப் போலச் சொல்லியிருக்கிறார். ஆனால் பீல்டு மார்ஷல் ரோமல் இதற்கு மாறுபட்ட அபிப்பிரயத்தை அதே சமயத்தில் சொல்லியிருக்கிறார். ஐரோப்பாவின் தெற்குப் பாதுகாப்பு அரண்களையும், மேற்குப் பாதுகாப்பு அரண்களையும் மேற்பார்வையிட்ட ரோமல், அவற்றின் சிறப்பான பலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, இரண்டாவது போர் முனை கூடிய சீக்கிரத்தில் தொடங்கிவிடும் என்று தெரிவித்துவிட்டார். இதனால் ஜெர்மன்

(10-ம் பக்கம் பார்க்க)

சுவர் இடிகிறது!

இன்றல்ல, நேற்றல்ல, இந்த யுத்தம் ஆரம்பமான தேதியிலிருந்தே, இப்படி நேச தேசத்தார் ஐரோப்பாவின் மேல் கரையில் வந்திறங்கக் கூடும் என்பது ஹிட்லருக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். பெல்ஜியத்திலே போர் நடந்து கொண்டிருக்கையில், நாஸிப் படைகள் வெகு சாமர்த்தியமாக, நேச தேசப் படைகளை வளைத்துக் கொள்ள முயன்றன. தங்களுடைய நிலைமையை உணர்ந்த நேசப் படையினர், டங்கர்க் துறைமுகத்திலிருந்து அதிவேகமாக சீமைக்குத் தப்பி ஓடினர். அதிலே ஏக நஷ்டம் ஏற்பட்டதென்பது வாஸ்தவம்.

வட்டியோடு வாங்க!

ஆனால், அத்தனைக்கும் வட்டிபோட்டு, நேச தேசத்தார் நாஸிகள் மீது பழி வாங்கி விடுவார்கள் என்பது ஹிட்லருக்கு அப்பொழுதே தோன்றியிருக்க வேண்டும். ஆகவே, ஐரோப்பாவின் மேல் கரை முழுவதும் அவர் கைகளில் சிக்கியதிலிருந்தே, அந்தக் கரையை ஒட்டி ஒரு பெரிய சிமிட்டி சுவரை எழுப்ப அவர் திட்டம் போட்டுவிட்டார். சென்ற நான்கு வருட காலமாகவே, இந்த வேலைகள் வெகு மும்முரமாக நடந்து வந்திருக்கின்றன. ஜெர்மானியரும், அவர்களிடம் கைதிகளாகச் சிக்கிய நேச தேசத்தவர்களும் கெடு பிடி கட்டாயத்தின் பேரில் சொணர்ந்து தள்ளப்பட்ட ஐரோப்பியத் தொழிலாளர்களும் இந்த வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். எந்த இடத்திலே நேச தேசப் படைகள் வந்திறங்குமென்று நேச தேசத்தார் முன் கூட்டியே ஹிட்லரிடம் தெரிவிக்க மாட்டார்கள் அல்லவா? ஆகவே, எல்லா இடங்களிலுமே பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய ஹிட்லர் உத்திர விட்டிருக்க வேண்டும். இந்த ஏற்பாடுகள் அநேகமாக முடிந்து விட்டதாகவே கூறுகிறார்கள். சமீபத்தில் கூட ரோமல் துரை இவற்றைச் சுற்றிப் பார்த்து விட்டு, 'பேஷ்!' சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். ஆயினும், இன்னும் ஒரு மாத வேலைகள் பாக்கியிருப்பதாக இப்பொழுது கூறப்படுகிறது. இன்னும் ஒரு மாதம் கழிந்திருந்தால், ஐரோப்பா மீது நேச தேசத்தார் இப்பொழுது படையெடுத்தது போல், அவ்வளவு சுலபமாகப் படையெடுத்திருக்க முடியாது என்றும் பேசிக் கொள்ளுகிறார்கள்.

வாக்குப்படியே!

அந்தக் கதையெல்லாம் இப்பொழுது எதற்கு? நேச தேசத்தார் வெகு காலமாகக் கூறிவந்த தங்களது வாக்கைப் பூரணமாகக் காப்பாற்றி விட்டார்கள். நமக்குத் தெரிந்த இரு பிரபலஸ்தர்கள் நான்கு மாதங்களுக்கு முன் ஒரு நாள் இந்த யுத்த சம்பந்தமாக, கடுமையான வாதத்திலிறங்கினார்கள்.

பந்தயமும், தோல்வியும்

'இரண்டாவது போர்முனையாவது, வெண்டைக்காயாவது. உங்க இங்கிலீஷ்காரன் சாப்பிட்டான் ஐயா! அவங்க அடிக்கிற போது, ஜெர்மன்காரன் கை புளியங்காய் பறிக்கவா போயிருக்கும்? இரண்டாவது போர் முனை என்று சொல்கிறதெல்லாம் சுத்த ஹம்பக். அப்படியே அது ஆரம்பமானதாக இருந்தாலும், இந்த வருஷத்திலே இல்லை அது' என்றார் ஒருவர்.

'மிஸ்டர்! அப்படி அவசரப்பட்டு ஒண்ணும் சொல்லிவிடாதேயும். தீர்மானமாக இரண்டாவது போர் முனை ஆரம்பமாகத் தான் போகிறது. சீமையிலே நடக்கும் ஏற்பாடுகளைப் பற்றியும், கடற்கரையோரம் உள்ள பொது ஜன ரயில் போக்கு வரத்து நின்றது பற்றியும், அமெரிக்காவில் படையெடுப்புப் படகு தயாரிப்பு வேலை பூர்த்தியானது பற்றியும் வந்த செய்திகளையெல்லாம் நீங்க கவனிக்கவில்லை போலிருக்கிறது. நிச்சயமாக இந்தக் கோடையிலேயே மேற்கே போர் முனை ஆரம்பமாகத் தான் போகிறது' என்று அடித்துப் பேசினார் இன்னொருவர்.

'பந்தயம்!'.

'ஒரு ரூபாய்! அது போதும்'. 'சரி' என்று இருவரும் ஒப்புக் கொண்டார்கள். போனவாரம் இரண்டாவது போர் முனை ஆரம்பமான செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தாரோ இல்லையோ, முதலிலே பேசியவர், இரண்டாவது பேசியவருக்கு, பேசாமல் ஒரு ரூபாயை ஒரு கவரிலே போட்டு அனுப்பிவிட்டார். அவர் தோற்று விட்டாரல்லவா?

கால தாமதம் செய்வதால் நாஸிகளுக்கு நல்லது என்பதை உணர்ந்து, ஐஸன்ஹோவர் துரை வெகு துரிதமாகவே படை யெடுப்பிற்கான தேதியைக் குறிப்பிட்டுவிட்டார். 6-ந் தேதி காலை படையெடுத்தார்கள் அல்லவா?

ஐந்தாம் தேதி, அவர் அந்நிய நாட்டுப் பத்திரிகா நிருபர்களிடம், தனது படைகள் எவ்வாறு படை யெடுக்கப் போகின்றன என்பதை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தாராம்.

இலேசல்ல!

பிரஞ்சுக்கரை, படத்திலே தோன்றுவது போல் சுத்தமாக இல்லை. ஒரே கரடு முரடான, செங்குத்தான கடற்கரையாகவே இருக்கிறது அது. அதோடு, அந்தக் கரைகளுக்கு அருகில் எல்லாம், பயங்கரமான ஆயுதங்களோடு நாஸிகள் அமர்ந்திருக்கிறார்கள். கடற் கரைகளிலும், அவற்றிற்கு முன்னாலும் ஏகப்பட்ட கண்ணி வெடிகள் நிறைந்திருந்தன. நெடுந் தூரம் சுடும் பீரங்கிகள் வேறே எங்கும் வாயைத் திறந்து கொண்டு கிடந்தன. ஆனால், வட பிரான்ஸில் உள்ள நார்மண்டிக் கரை தான், படையெடுப்பிற்கு ஏற்ற ஸ்தலம் என்பதை ஐஸன்ஹோவர் தெரிந்தெடுத்துக் கொண்டது பாராட்டத் தக்கது. நேச தேசப் படையெடுப்புப் பரீக்ஷைப் படைகள் எல்லா இடங்களையும் அலசிப் பார்த்திருக்கின்றனர். கடைசியாக நார்மண்டிக் கரை தான் நல்ல இடம் என்பதை அவர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

மவுன்ட்பேட்டன் அறிந்தது

இந்தப் பிரதேசம் படையெடுப்பிற்கு ஏற்ற பிரதேசம் என்பதை வெகு காலத்திற்கு முன்பாகவே மவுன்ட்பேட்டன் பிரபு தீர்மானித்திருந்ததாக அறிவிக்கப்படுகிறது. ஆனால், அவர் தமது தீர்மானப்படி அப்பிரதேசத்தைப் படையெடுக்க இப்பொழுது அங்கில்லை. அவருடைய உழைப்பின் பயனை கீழ்த்திசையில் உள்ளவர்கள் அல்லவா அடையப் போகிறார்கள்? அவர் தற்சமயம் ஜப்பானியரை உதைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். கண்டியிலே தலைமைக் காரியாலயத்தை ஸ்தாபித்துக் கொண்டிருக்கும் அவர், சுகமாகக் காற்றை உட்கொண்டு, ஹாயாகத் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. பர்மா-இந்திய எல்லையருகே நடக்கும் கொஹிமா மணிபுரிச் சண்டைகளை நடத்திக் கொண்டும், மேற்கொண்டு பலமானதொரு நடவடிக்கையை எடுப்பதற்கு வகை தேடிக் கொண்டுமிருக்கிறார்.

ஐரோப்பிய மண்ணில்

நிற்க, மேற்கு ஐரோப்பிய மண்ணில் கிட்டத்தட்ட இரண்டு லக்ஷம் நேச தேசப் படைகள் வந்திறங்கியிருக்கக்கூடும் என்று மதிப்பிடப்படுகிறது. பல காலமாகப் பெற்ற பயிற்சியையெல்லாம் நேச தேசப் படைகள் உபயோகப்படுத்திக் கொண்டன. பிரமாண்டமான சப்பற்படை வானத்திலே ஒரு பெரிய விமானப் பந்தல், இத்தனையுடன் ஹிட்லரின் கோட்டையைத் தகர்க்க ஒரு பெரிய படை வெற்றியுடன் ஐரோப்பாவில் இறங்கிவிட்டது. இறங்கினதிலிருந்து எட்டு தினங்களுக்குள், நேச தேசப்படைகள் தங்கியிருக்கும் பிரதேசத்தின் நீளம் 59, 60 மைல்களாகியிருக்கிறது. அப்படைகள் 18 மைல்கள் முன்னேறியிருக்கின்றன. வருண பகவான் வீண் சங்கடங்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறாராம். ஆனாலும், தமது லக்ஷ்யத்திலேயே கண்ணாக உள்ள நேச தேசத்தார் மேலும் மேலும் படைகளையும் ஆயுதங்களையும் கொண்டு இறக்கிய வண்ணமே இருக்கிறார்கள். நேச தேச விமானப் படை நொறுக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது.

நாஸிகள் வெறி

நாஸிகளும் சும்மா இல்லை. அவர்களும் இரண்டு லக்ஷம் பேர்களைப் போரில் ஈடுபடுத்திவிட்டனர். பயங்கரமான போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பிரஞ்சுக் கடற்கரையில் நடந்த யுத்தத்தைப் பார்த்தால், பச்சை நரகமாகவே அப்பிரதேசம் விளங்கியதாக அமெரிக்கப் படைகளுடனிருந்த ஒரு நிருபர் தெரிவிக்கிறார். இது எதிர் பார்த்தது தான். இனித் தானிருக்கிறது உண்மையான போர். எது வந்தாலும் நேச தேசத்தார் விடப் போவதில்லை. முதன் முதலில் மேற்கு ஐரோப்பியச் சுவரை இடித்துத் தள்ள முயன்று, சிறிது வெற்றியும் பெற்றது பாராட்டத்தக்கதே. ஆளற்ற சிமிட்டி ரஸ்தாவில், மோட்டார் பறப்பது போல், நேச தேசப் படைகள் முன்னேறும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. ஆனால், அவை, தாம் பிடித்த இடத்தைக் கைவிடா என்பது மட்டும் நிச்சயம்.

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

தென்னுற்காடு ஜில்லா

சுமார் ஆறு மாதங்களுக்கு முன் அநீத சேமிப்பு, கொள்ளை லாபம் இவைகளைத் தவிர்ப்பதற்கு இந்திய அரசாங்கத்தாரால் கடுமையான சட்டம் இயற்றப்பட்டது. இது தென் ஆற்காடு ஜில்லாவிலும் அமுலில் இருக்கிறது.

கடலூரில் அநீத சேமிப்பையும் கொள்ளை லாபத்தையும் தடுக்க ஆலோசனை சொல்வதற்கு கலெக்டரின் தலைமையில் ஒரு கமிட்டி உண்டு. இதே மாதிரி ஒவ்வொரு தாலுகாவிலும் தாசில்தார் தலைமையில் தாலுகா கமிட்டிகள் இருக்கின்றன. இவைகளில் அந்தந்த தாலுகாவின் தேசியப் போர் முனைப் பிரசாரகரையும், கௌரவ அமைப்பாளரையும் அங்கத்தினராக நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவர்கள் யாவருமே மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களில் கூட ஏதாவது கொள்ளை-லாப-முயற்சிகள் நடைபெறுகின்றனவா வென்று விழிப்புடன் கவனித்து வருவார்கள்.

கொள்ளை லாபத்தைத் தடுப்பதற்கு ஆலோசனைக் கமிட்டிகள் இருப்பது போல, விலைவாசி நிர்ணய ஆலோசனைக் கமிட்டிகளும் உண்டு. இதில் பெரும்பாலான அங்கத்தினர்கள் வியாபாரிகளே.

நெல், உளுந்து, துவரை, மிளகாய் முதலிய உணவு தானியப் பொருள்கள், விறகு, இவைகளின் விலைகள், கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த ஜில்லாவின் முனிசிபல் நகரங்களில் அரிசிப் பங்கீடு அமுலுக்கு வந்து விட்டது. இதனால் இந்நகரங்களில் அரிசியின் விலை கட்டுப்பாடாகி விட்டது.

கைத் தொழிலாளிகள் அநியாயமாக அதிகக் கூலி கேட்பதையும் தடுக்க வேண்டும். ஆகவே இந்த ஜில்லாவின் அநீத சேமிப்பு கொள்ளை லாபத் தவிர்ப்பு ஆலோசனைக் கமிட்டியார் தையற் கூலிகளைக் கட்டுப் படுத்த ஏற்பாடு செய்து வருகின்றனர்.

வியாபார வரி உத்தியோகஸ்தர்கள் (Commercial Tax Officers) அநீத சேமிப்பைத் தடுப்பதற்கு, அமைக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டியார், தம் சுற்றுப் பிரயாணங்களிலும் விசாரணைகளிலும் வியாபாரிகள் நியாயமான விலைக்குப் பொருள்களை விற்கின்றனரா வென்று கவனிக்கின்றனர்.

கொள்ளை லாப அநீத சேமிப்புத் தவிர்ப்புச் சட்டத்தை மீறியவர்களை, எவ்வளவு செல்வாக்குள்ள பெரிய வியாபாரியாயிருந்தாலும், ரெவினியூ இலாகா மாஜிஸ்ட்ரேட்டுகள் கண்டிப்பாகத் தண்டித்து விடுகிறார்கள். இதனால் வியாபார வரி இலாகா உத்தியோகஸ்தர்களின் உழைப்பாலும், முன்னைய நிலைமையை விட தற்போதைய நிலைமை எவ்வளவோ மேன்மை யடைந்திருக்கிறது. நியாயமான அல்லது கட்டுப்பாடான விலைக்கே பொருள்கள் கிடைக்கின்றன.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

மக்களுக்கு ஆறுதலளிக்கும் கோபல்சின் முயற்சி வீணாயிருக்க வேண்டும்.

பிரிட்டிஷ் மக்களுக்கு மனோவியாதியாம்!

ஜெர்மன் மக்களுடைய மனோ நிலைக்காகச் செய்யும் கோபல்சின் பிரசாரத்தை விட்டு விட்டு, பிரிட்டிஷ் மக்களின் மனோ நிலைமையைப் பற்றி அவர் செய்த பிரசாரத்தைச் சற்று கவனிப்போம். 17 நாட்களுக்கு முன், அதாவது மே மாதம் 21-ந் தேதி, பர்லின் நிலையம் ஐரோப்பியப் படையெடுப்பு சம்பந்தமாக, பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரு மனோ வியாதி பிடித்துக் கொண்டு வாட்டுகிற தென்றும், கூச்சலும், கூக்குரலும் போடுவதோடு அந்த வியாதி நின்றுவிடுகிற தென்றும் கூறியிருக்கிறது. பர்லின் இத்தோடு விட்டுவிடவில்லை. "இங்கிலீஷ் சானலு"க்கு அக்கரையில் உள்ள எல்லாம் அமைதியாவும், கலவரமில்லாமலும் இருக்கின்றன; கடுமையான பயிற்சிக் காலத்துக்குப் பிறகு, ஹிட்லருடைய துருப்புகள் எதிர்த்துத் தாக்கி, முடிவான வெற்றி யடைவதற்கு அணி வகுத்துச் செல்லும்" என்று பர்லின் கூறுகிறது.

வியாதி பிரிட்டிஷாருக்கா? ஹிட்லருக்கா?

ஆனால் நேற்றையத் தினம் காலை, ஐரோப்பியப் படை யெடுப்பு என்பது பிரிட்டிஷ் மக்களுடைய மனோவியாதியல்ல, ஹிட்லருடைய ஐரோப்பாவை தாக்கிய கொடூர வியாதி என்பது பர்லினுக்கு விளக்கமாகத் தெரிந்திருக்க வேண்டும். எதிர்த்துத் தாக்கி முடிவான வெற்றியடைய அணிவகுத்துச் செல்ல ஆரம்பித்திருப்பது ஹிட்லருடைய துருப்புகள் அல்ல; நேசதேசத் துருப்புகள் தான் என்று கோபல்ஸ் உணர்ந்து கதி கலங்கியிருப்பார். முக்கியமாக ஏன் கதி கலங்கி இருப்பார் என்று கேட்கலாம். ஏனென்றால், சென்ற இரண்டு வருஷ காலமாக, இரண்டாவது போர் முனையை இகழ்ந்தவர் அவர் தான்; ஐரோப்பியப் படை யெடுப்பை அலட்சியம் செய்தவர் அவர் தான். 1942-ம் வருஷம், நவம்பர் மாதம் 10-ந் தேதி, டாக்டர் கோபல்ஸ் என்ன கூறினார்? "ஆங்கிலேயரால் படை யெடுக்க முயற்சி செய்வதற்கும் கூட முடியாதபடி அவ்வளவு பலமாக ஐரோப்பா பாதுகாக்கப் பட்டிருக்கிற தென்பதை ராணுவ அறிஞர்கள் அனைவரும் அறிவார்கள்" என்றார். இதற்கு ஒரு மாதத்துக்கு முன் அதாவது, 1942-ம் ஆண்டு அக்டோபர் 17-ல் பர்லின் என்ன கூறிற்று?" "இரண்டாவது போர் முனை என்று எதிரி நினைப்பதற்குக்கூட இல்லாத அவ்வளவு சிறந்த முறையில் ஜெர்மனியும்-அதன் கூட்டாளிகளும் பலம் பொருந்த விளங்குகின்றன" என்று ஜெர்மன் மக்களுக்கு அறிவித்தது.

ஹிட்லர் பெருமிதப் பேச்சு

இதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன், அதாவது 1940-ம் ஆண்டு செப்டெம்பர் 4-ந் தேதி, ஹிட்லர் என்ன கூறினார்?

"பிரிட்டன் மேல் படை யெடுப்பதாகக் கூறினீர்களே? உங்களை, இன்னும் வரக்காணோமே" என்று பிரிட்டிஷார் கேட்கிறார்கள். அதற்கு, "'பொறுங்கள் நாங்கள் கட்டாயம் வரத்தான் போகிறோம்' என்று நாங்கள் பதிலளிக்கிறோம்." என்று ஹிட்லர் பெருமிதத்துடன் பேசினார்.

பிரிட்டிஷ் மக்கள் மகா பொறுமைசாலிகள், பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள் ஒரு வருஷ மாயிற்று, இரண்டு வருஷமாயிற்று, மூன்றும் ஆயிற்று. படை யெடுப்பை காணோம். ஆகையால் அவர்களே, இதர நேச நாட்டுத் துணையுடன், படை யெடுப்பை ஆரம்பித்திருக்கிறார்கள். இது ஒரு பிரம்மாண்டமான படை யெடுப்பு, மிஸ்டர் சர்ச்சில் கூறியபடி, யுத்தத் தளவாடம், ரசாயன சாஸ்திரம், முன் சாக்கிரதையான அறிவு—இவை யெல்லாம் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து தொடங்கிய படை யெடுப்பு. 1940-ம் வருஷத்தில், டங்கர்க் வெளியேற்ற சம்பவத்துக்கு ஒரு வாரம், அல்லது இரண்டு வாரத்துக்குப் பிறகு, பிரிட்டிஷார் பிரெஞ்சுக் கடற் கரை யோரங்களில் இறங்கித் தாக்கினார்கள்.

பரிபக்குவத் தாக்குதல்

அச் சிறு தாக்குதல், பரிபக்குவமடைந்து இப்போது மாபெருந் தாக்குதலாயிருக்கிறது. இந்த இரண்டாவது போர் முனை—மற்றொரு போர் முனை ரஷ்யர்களுடையது—மார்ஷல் கோபல்சின் அடி வயிற்றில்—அது பிரமாண்டமான வயிறு—குழப்பத்தை ஏற்படுத்தி யிருக்கும். செப்டெம்பர் 1939-ல் "இப்போது எங்களுக்கு ஒரே ஒரு போர் முனை தான் உண்டு. இது தான் இந்த யுத்தத்தின் தனிச் சிறப்பு" என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்தத் தனிச் சிறப்பு இப்போது தவிடு பொடியாய் விட்டது. இரண்டாவது போர் முனையும் மும்முரமாகத் தொடங்கிவிட்டது. "புலியாவது, வருவதாவது" என்று ஆக்கிரம அகந்தையுள்ள ஜெர்மனி மேற்கே அமெரிக்கப் புலியும், பிரிட்டிஷ் சிங்கமும், கிழக்கே ரஷ்யக் கரடியும், தன்னை நோக்கி நெருங்கி வருவதைக் காண்கிறது; தன்னுடைய முடிவு காலம், எண்ணிக்கைக் கணக்கில் வந்து விட்ட தென்பதை அது நன்றாக உணருகிறது.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து 'அச்சுப் பிரசாரம்' என்னும் தொடரில் மிஸ்டர் டி. ஏ. வி. நாதன் ஜூன் மாதம் 7-ம் தேதி ஒலி பரப்பிய பிரசங்கம்.

சில ரசமான விவரங்கள்

இறங்குங்கள். பாய்ந்து முன்னேறுங்கள். எதிரே எத்தகைய இடைஞ்சல்கள் இருந்தாலும் லக்ஷியம் செய்யாதீர்கள். எடுத்த எடுப்பிலேயே, போடுகிற போட்டிலே, எதிரி திகைத்துப் போய் விட வேண்டும். இது, முன்பு அவன் கற்பித்த பாடம் தானே!' என்றாராம், ஜெனரல் ஐஸன்ஹோவர், இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கப் புறப்பட்ட வீரர்களை நோக்கி. அதன்படியே செய்து விட்டார்கள் அவர்கள். சமுத்திரக் கரைகளில் பிரமாதமான சண்டை எதுவும் நடக்கவில்லை. சண்டை ஏதுமின்றியே, வெற்றிமட்டும் நேச தேசப் படைகளுக்குக் கிட்டிவிட்டது. இதை எண்ணி ஐஸன்ஹோவரும், நிலப் படைகளை மேற் பார்வை பார்த்துக் கொள்ளும் ஜெனரல் மண்ட்காமரியும் மகிழ்ச்சி யடைந்திருக்கிறார்கள். ஜெர்மன் படையிலே, இத்தாலியரும், ஜப்பானியரும் கூட இருக்கிறார்களாம். அவர்களில் பலர் இப்பொழுது சீமைக்குப் பயணம் போயிருக்கிறார்களாம், கைதிகளாக.

ஜெர்மன் படையில் முரட்டுப் பெண்கள்.

நேச தேசப் படைகளுக்குத் தொந்தரவு கொடுத்து, எதிர்க்கவும் செய்த ஜெர்மன் படைகளிலே, முரட்டுப் பெண்களும் இருந்தார்களாம். அவர்கள் ஆங்காங்கே மரங்களிலும், மாடிகளிலும், மதில்களிலும் மறைந்திருந்து, துப்பாக்கியால் குறி தவறாது சுட்டார்களாம். 'பெண்ணென்றால் பேயும் இரங்கு' மென்பார்கள். வாஸ்தவம். ஆனால், இப்படி பேய் போல் மனிதருயிர்களை வாங்கும் பெண்மணிகளைக் கண்டு யார் இரங்குவார்கள்? துப்பாக்கியால் சுட்டுத்தான் வீழ்த்துவார்கள். அதையே தான் நேசப் படையிலிருந்தவர்கள் செய்தார்கள்.

சட்டியிலிருந்தால் அகப்பையில் வராதா ?

ஜெர்மன் படையிலே, கர்நாடக பிரஞ்சு டாங்கிகளும் நடமாடிக் கொண்டிருக்கின்றனவாம். நாளுக்கு நாள் நவீனம் மலிந்து, அதியற்புதமான, அசைக்க முடியாத வலிமை பெற்ற டாங்கிகள் போர் முனைகளில் தோன்றிக் கொண்டிருக்க, பத்தாம் பசலி பிரஞ்சு டாங்கிகள் நேசப் படைகளைத் தடுத்து நிறுத்த வருவதென்றால், ஜெர்மானியரிடமுள்ள கையிருப்பு என்ன என்று யூகிக்கலாம் போலிருக்கிறதே! சட்டியிலே இருந்தால், அகப்பையில் வராதா என்ன? நேச தேச விமானங்கள் இன்றும், இன்னமும் ஆயிரக்கணக்கில் நாஸிப் பிரதேசங்கள் மீது பறந்து சென்று, ஜெர்மானியரது உயிர் நாடிகளை யெல்லாம் தாக்கி, தவிக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. புதிதாக விமானங்களோ, டாங்கிகளோ தயாரிக்க உள்ள வசதிகள் வரவரக் குறைந்து வருகின்றன.

கேசல்ரிங் பின் வாங்குகிறார்.

கெஸல்ரிங் துரையும், இத்தாலியிலே கோட்டை விட்டு விட்டு, தலைவிரி கோலமாக தமது படைகளுடன் பின்வாங்கி ஓடுகிறார். ரோமிற்கு 75 மைலுக்கு வடக்கே கொஞ்சம் மூச்சு வாங்க நின்று போராடத் துணிந்திருக்கிறாராம். அவருக்கு உதவி அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால், ஜெர்மனிக்கு தென் திசையிலிருந்தும் ஆபத்து வந்து விடுமே! ருஷ்யப் போர் முனையும் ஆபத்தானதாக இருக்கிறது. அங்கிருந்தும் டாங்கிகளையும், ஆட்களையும் கிளப்ப முடியவில்லை. ஆகவே, ஏற்கெனவே இருந்ததை வைத்துக் கொண்டு, ரோமல் துரை பிரான்ஸிலே சண்டை போடுகிறார். **இது வரை இரண்டரை லக்ஷம் நாஸிகள் போர் முனைக்குச் சென்றிருக்கிறார்களாம்.**

பிரிட்டிஷாருக்கு முதலிரண்டு நாட்களில் 283 விமானங்கள் நாசமாயினவாம். நாஸிகளின் விமானங்களில் 176 தான் பாழாயினவாம். இதிலிருந்தே, ஜெர்மானியரின் எதிர்ப்பு வெகு கடுமை என்பது தெரியவில்லையா? இதோடு, அமெரிக்கப் படைகள் சென்றிறங்கிய பிரதேசத்திலே, கடற்கரை யோரப் பாதுகாப்புப் படைகளுக் சப் பதிலாக, அசல் போர்க்களப் படைகளே பலமான ஆயுதங்களோடு காத்திருந்தனவாம். ஆகவே, அமெரிக்கர்கள் பாடு, கரையிலிறங்குவது ரொம்பக் கஷ்டமாகி விட்டதாம். கடற்கரையிலே ஒரே பிணக் குவியல் தானாம். அத்தனையையும் அடக்கம் செய்வதற்குள், சமுத்திர பகவான் வேறே அவசர அவசரமாக வந்து பல உடல்களை வாரிக் கொண்டு போனாராம். எங்கும் ஒரே அலங்கோலமாம். ஏக குண்டுகள் பறந்தனவாம். ஆயினும், அமெரிக்கர்கள் தங்களது அஞ்சா நெஞ்சத் தன்மையை வெளிக் காட்ட அதொரு நல்ல சந்தர்ப்பமாயிற்று. ஒரே பிடிவாதத்தோடு அவர்கள் கரையிலிறங்கி, இப்பொழுது முன்னேறிக்கொண்டும் இருக்கிறார்கள்.

புதிய ஆயுதம்

இந்த இரண்டாவது போர் முனையிலே, எடுத்த எடுப்பிலே வெற்றி கிடைத்ததற்குப் பல காரணங்களுண்டு. பல மாதங்களாகவே, ஹிட்லர் எழுப்பிக்கொண்டிருந்த பாதுகாப்பு மதில்களைப் பற்றிப் பதினாயிரக் கணக்கான நோட்டுக்கள் மூலம் ஏராளமான விவரங்கள் சேகரித்திருக்கிறார்கள். எங்கெங்கு அதில் பலஹீனமிருக்கிறது என்பதையும் யூகித்துக் கொண்டார்கள். அதிலிருந்து தான் நார்மண்டிப் பிரதேசம் படையெடுப்பிற்கு ஏற்ற பிரதேசம் என்று தீர்மானித்தார்கள். இரண்டாவதாக, பிரமாண்டமான, யந்திரமற்ற, கிளைடர் விமான மொன்று புதிதாகக் கட்டப்பட்டது. அது ஏராளமாக உபயோகிக்கப்பட்டது. அது கீழே வந்து இறங்கு முன்பே, அதற்குள்ளே ஏதோ ஒரு பெரிய மோட்டார் புறப்படுவதுபோன்ற சப்தம் எழுகிறதாம். அந்த விமானம் தரையைத் தொட்டதும், பீரங்கி சகிதமாக ஒரு பெரிய டாங்கி கீழே இறங்கி நேரே போராடப் புறப்படுகிறதாம்.

அமெரிக்கப் படைகளுக்கு யார் தலைவர் தெரியுமா? ஆதியிலே ஒரு சாதாரண சிப்பாயாகச் சேர்ந்து இப்பொழுது பெரிய ஜெனரலானதொரு மனுஷரே அப்படைகளுக்குத் தலைவராக இருக்கிறார்.

நேசத் தலைவர்களின் பெரு மகிழ்ச்சி

பிரிட்டிஷ், கனடிய, அமெரிக்கப் படைகள் உள்ள ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும், தங்களது பொது லக்ஷியத்தை அடைய அவர்களிடை உள்ள உத்சாகத்தையும் கண்டு, நேசதேசத் தலைவர்கள் அபார மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது ஐரோப்பாவில் போயிறங்கியவர்களில் 1,500 இந்தியர்களுமிருக்கிறார்களாம். இவர்கள் மட்டும் பயந்தவர்களா என்ன? இவர்களது சமர்த்தை ஜெர்மானியர்களிடம் கேட்டால் நன்றாகத் தெரியுமே? ஆப்பிரிகாவிலும், இத்தாலியிலும் ஜெர்மானியரை உதைத்தது யார்? இவர்கள் தான்? அந்த கொடுக்கிக் கத்தியைத் தூக்கிக் கொண்டு பாயும் கூர்க்கரைக் கண்டாலே, நாஸிகளுக்கு சப்தநாடியும் அடங்கி விடுகிறதாமே!

பின்லாந்து மீது ரஷ்யா திருஷ்டி.

ருஷ்யர்கள் பின்லாந்துக்காரர்கள் மீது தங்கள் திருஷ்டியை வீழ்த்த ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வளவு காலமாக அவர்களுக்கு இல்லாதிருந்த தலை வலி இப்பொழுது ஆரம்பித்திருக்கும். பின்லாந்து மூலமாக, ஜெர்மனியை வடக்கிலிருந்து அவர்கள் தாக்க ஆரம்பித்தால், தமாஷாக இருக்குமே!

நேச தேசத்தார் நார்வேயில் வந்திறங்கினாலும் சரி, பின்லாந்து மூலம் பாய்ந்தாலும் சரி, தகராறு என்றறிந்த ஸ்வீடன், தனது ராணுவத்தைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறதாம். யுத்த வலையில் அதுவும் வீழுமா என்று பார்க்க வேண்டும்.

இந்தியாவிலே, ஜப்பானியர் அதிகமாக வாலாட்டவில்லை. வாலைக் கால்களுக்கிடையில் மடக்கிக் கொண்டு ஓடுகிறார்கள். ஆங்காங்கே கொஞ்சம் நின்று நின்றுக் குலைக்கிறார்கள். கொஹிமாவிலிருந்து மணிபுரி போகும் பாதையிலே ஓரிடத்தில் நின்று போராடுகிறார்களாம். இனி அவர்கள் பாச்சா பலிக்காது, அவர்கள் உதைவாங்கு படலம் அல்லவா இப்பொழுது நடக்கிறது?

வானொலி நாட் குறிப்புக்கள்.

சென்னை, ஜூன்மீ 16உ மாலை 7–00 மேற்கோள்கள்; ''அமெரிக்க நிர்வாகம்''—ராவ் சாஹிப் டி. எஸ். கச்சாபிகேச முதலியார்.

ஷை ஷை 17உ மாலை 7–45—என்ன செய்திகள்.

ஷை ஷை 20உ மாலை 7–00—நடை முதல் பேச்சு.

ஷை ஷை 21உ மாலை 7–00—அச்சுப்பிரசார ஆராய்ச்சி—ராவ் சாஹிப் டி. ஏ. வி. நாதன்.

ஷை ஷை 22உ மாலை 7–45—ஹிட்லரின் மடமை—ஜி. பார்த்தசாரதி.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜூன் 8.—படை யெடுப்பின் முற்போக்கைக் குறித்து மிஸ்டர் சர்ச்சிலும், ஹாலிபாக்ஸ் பிரபுவும் அறிக்கைகள் விடுத்தனர். மன்னர்பிரானும், பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலும் நேச நாட்டுப் படைகளின் தலைமை காரியாலயத்திற்குப் போய் மகா படைத் தலைவர் ஜெனரல் அய்சினேவரைக் கண்டு பேசினார்கள். பிறகு, நேச நாடுகளின் விமானப் படைகளின் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று விமானப் படைத் தலைவர் மார்ஷல் சர் ட்ராபோர்ட்லே மாலரியைக் கண்டு பேசினார்கள்.

ஜூன் 9.—ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல், அட்மிரல் கிங், ஜெனரல் ஆர்னல்ட் ஆகியோர் அமெரிக்காவிலிருந்து லண்டன் வந்து சேர்ந்தனர்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஜூன் 9.—பிரஞ்சுப் போர் முனையில் நேச நாட்டுப் படைகளின் முன்னேற்றம் மிகவும் மெதுவா யிருக்கிற தென்றும், தன்னெடிகால் வந்து விரைவில் சந்திப்பா ரென்றும் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூன் 7.—கொஹிமா பகுதியில் ஜப்பானியர்கள் விரைவில் பின் வாங்கிக் கொண்டனர்.

சக்கபாமா, சோகுமி என்னு மிடங்களை நேசப் படைகள் கைப் பற்றிக் கொண்டன.

ஜூன் 8.—நேச நாட்டுப் படைகள் **அரட்மா ஸ்பர்** என்னு மிடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 9.—மியிட்கியானவுக்கு அருகிலுள்ள **ஹோலா** என்னுமிடத்தை சின்டிட் படைகள் கைப்பற்றின. **சாங்ரோ, கடோங்கிடி, பின்மி** என்னு மிடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 11.—விஸ்வேமாவி லிருந்து எதிரிகள் விரட்டப்பட்டுவிட்டார்கள்.

ஜூன் 12.—இம்பால் பகுதியில், கங்லடோங்கிக்கு வடக்கே நேசநாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

ஜூன் 11.—பின்லாந்து எல்லைக்குள் சோவியத் படைகள் 25 கிலோமீட்டர் தூரம் முன்னேறி 80 ஊர்களைக் கைப்பற்றின.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜூன் 8.—காஸ்டெலானே, சிவிடா, வாக்சியா, சுபியாகோ, ப்ராக்சியானே ஆகிய ஊர்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

மார்ஷல் படாக்லியோ ரோமாபுரி வந்து சேர்ந்தார்.

ஜூன் 9.—விடெர்போ, வெட்ரெல்கா, டார்க்வீனியா, பாப்ரிகாடி ரோமா, டொல்லோ, அகோஸ்டா, பலொம்பரா-சபினு, சுட்ரி கப்ரரோலா ஆகிய ஊர்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

மார்ஷல் படாக்லியோ அரசியல் துறையினின்று விலகிக் கொண்டார்.

ஒரு புதிய மந்திரி சபையை யமைக்குமாறு மாஜி இத்தாலிய பிரதம மந்திரி சைனர் பொனோலியை உம்பர்டோ இளவரசர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜூன் 10.—டஸ்கேனியா, வெட்ரெல்லா, அர்சோலி, கைலியானே, கார்டியாக்ரெலா, ஆர்சோக்னு ஆகிய ஊர்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 11.—பஸ்காரா என்னுமிடத்தை இந்தியப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. அன்றியும் நேசநாட்டுப் படைகள் கைப்பற்றிய **சுயெட்டி, சுலமோனு** ஆகிய ஊர்களிலிருந்த ஜெர்மானியர்கள் விரட்டப்பட்டு விட்டார்கள்.

ஜூன் 12.—அவெஸ்ஸர்னோ, போக்கியோ சோமா வில்லா ஆகியவை நேசப் படையினர் வசமாயின.

விஷி, சுயேச்சை பிரான்சு எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூன் 7.—நார்மண்டியின் வட கரையிலுள்ள ஓர்னி பகுதியிலும் மற்றும் சில பகுதிகளிலும் நேச நாட்டுப் படைகள் கடற் கரையில் 2 மைல் அகலமும் 6 மைல் தூரம் உள் நாட்டிலும் தம் வசப்படுத்தி ஊன்றிக் கொண்டார்கள். சில இடங்களில் 12 மைல் தூரம் உள் நாட்டிற் புகுந்து விட்டார்கள்.

ஜூன் 8.—பேயக்ஸ், என்னும் இடத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

ஜூன் 9.—கடற்கரையில் 36 மைல் அகலத்தில் நேச நாட்டுப் படைகள் ஊன்றிக் கொண்டன.

பார்மிக்னி, சென்ட்மியர், எக்லெஸ் என்னுமிடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 10.—பிரான்சைத் தாக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகளின் தலைவர் ஜெனரல் மண்ட்காமரி தன் காரியாலயத்தை பிரான்சில் ஸ்தாபித்துக் கொண்டார்.

ட்ரிவியர்ஸ், இசிக்னி என்னு மிடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 11.—லிசான், டில்லி சூர் ஸ்னெல்ஸ் ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

கடற்கரையில் 51 மைல் அகலமும் 10¼ மைல் தூரத்திற்கு உள் நாட்டிலும் நேசப் படைகள் பரவி கைப்பற்றிக் கொண்டன.

ஜூன் 12.—கரென்டான் என்னுமிடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

கரையில் 50 மைல் அகலமும் 18 மைல் தூரம், உள் நாட்டிலும் நேச நாட்டுப் படைகள் வசமானது.

மிஸ்டர் சர்ச்சில், ஜெனரல் ஸ்மட்ஸ், மகா படைத் தலைவரின் உத்தியோக இலாக்காத் தலைவரான **சர் ஆலன் ப்ரூக்** ஆகியோர் நார்மண்டி கடற்கரையில் நேசநாட்டினர் ஊன்றியுள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்தனர்.

ஜெனரல் அய்சினேவர், அமெரிக்கப் படை உத்தியோக இலாக்காத் தலைவரான **ஜெனரல் மார்ஷல், அட்மிரல் கிங், ஜெனரல் ஆர்னல்ட்** ஆகியோர் நார்மண்டி போர்முனையிலுள்ள அமெரிக்கப் படைப் பகுதியைப் பார்வையிட்டனர்.

நடு நிலைமை நாடுகள்.

ஜூன் 7.—போர்ச்சுகலி லிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ‘உல்பாரம்’ சம்பந்தமாக ஜூன் மாதம் 5-ம் தேதி முதல் தடை விதிக்கப்பட வேண்டு மென்று கோரியதை, அந்த அரசாங்கம் ஒத்துக் கொண்டதாக பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி மிஸ்டர் ஆன்டனி ஈடன் காமன்ஸ் சபையில் இன்று அறிவித்தார்.

ஜூன் 9.—டார்டெனெல்ஸ் வழியாக ஜெர்மன் கப்பல்கள் போவதை அனுமதித்ததைக் கண்டித்து, பிரிட்டிஷ் அரசாங்கம், துருக்கி அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி யிருப்பதாகத் தெரிகிறது.

ஜூன் 11.—ஜெர்மனிக்குத் தான் ஏற்றுமதி செய்து கொண்டிருந்த ‘பால் பேரிங்’கை அடியோடு நிறுத்திவிடுவதாகவும், மற்ற ஏற்றுமதிகளில் 100-க்கு 20 பங்கு விகிதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப் போவதையும், ஸ்வீடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருப்பதாகத் தெரிகிறது.

தன் நாடு இராணுவத் துறையில் வெகுவாக ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பதாக **ஸ்வீடன் பிரதம மந்திரி மிஸ்டர் ஆல்பியன் ஹான்ஸன்** குறிப்பிட்டார்.

தூரக்கிழக்கு நாடுகள்.

ஜூன் 8.—பியாக் தீவிலிருக்கும் முக்கியமான ஜப்பானிய விமானக் கூடமான **மோக்மர்** என்னுமிடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. கேசல் துறைமுகத்திலுள்ள **மவரகா** என்னுமிடத்தை நேசப் படைகள் கைப்கற்றிக் கொண்டன.

ஜூன் 9.—நியூ கினிக்கு வட மேற்கே ஒரு ஜப்பானிய ‘க்ரூய்சர்’ கப்பல் அடிபட்டுப் பழுதானது.

ஜூன் 11.—மரியானு தீவுகளைச் சேர்ந்த சைபான், டினியன், குவாம் ஆகிய பகுதிகளை நேசநாட்டு விமானப் படைகள் கடுமையாகத் தாக்கின.

பர்மா ரோட்டிலுள்ள **லங்லிங்** என்னும் நகரத்தை சீனப் படைகள் கைப்பற்றின.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.